**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 345/2023 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா. 2 |
| Name : | திரு. ஜெயபிரகாஷ் |
| Father's Name/Husband Name: | திரு. மதியழகன் |
| Village : | அரும்பாவூர் |
| Taluk : | வேப்பந்தட்டை |
| Age : | 44/ 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 09.10.2025

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 அண்ணாதுரை , எதிரி 2 சூர்யா, எதிரி 3 ஆரியமலை ஆகியோர்கள் ஆஜர்)**

**முதல் விசாரணை**

1(i) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் டிரைவராக பணி புரிந்து வருகிறேன். அ.சா.1 இந்திராணியை தெரியும். எதிரிகள் அனைவரையும் தெரியும். சுமார் 5-6 வருடங்களுக்கு முன்பாக இந்திராணி என்ன பிரச்சனை என்று எனக்கு தெரியாது. எதிரி அண்ணாதுரையின் மகன் சூர்யா அடித்துவிட்டதாக சொன்ன பிறகு நான் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தேன். நான் சென்று பார்த்த போது இந்திராணிக்கு தலையில் கட்டு போடப்பட்டிருந்தது. என்ன பிரச்சனை என்று நான் தெரிந்து கொள்ளவில்லை. போலிசார் என்னை விசாரித்தனர். போலிசார் விசாரணையில் மேற்கண்ட சங்கதிகளை தான் கூறினேன்.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிஸ் விசாரணையில் நான் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக கூறவில்லை. எதிரிகள் எனது உறவினர்களா என்றால் ஒரே சமூதாயத்தைச் சேர்ந்தவர்கள். போலிசார்

என்னை விசாரித்தபோது, கடந்த 07.05.2019 அன்று இரவு சுமார் 8.30 மணியளவில் அ.சா.1 இந்திராணியை எதிரிகள் அண்ணாதுரை மற்றும் ஆரியமாலா ஆகியோர்கள் தகாத வார்த்தைகளால் பேசினார்கள் என்றும், எதிரிகள் ஆரியமாலாவும், சூர்யாவும் சாட்சி லோகநாதனை அடித்து கீழே தள்ளினார்கள் என்றும், எதிரி சூர்யா சைக்கிள் செயினால் அ.சா.1 இந்திராணியின் தலையில் அடித்து காயப்படுத்தினார் என்றும், எதிரி சூர்யா சைக்கிள் செயினை காட்டி கொலை மிரட்டல் விடுத்தார் என்றும், இச்சம்பவம் எனக்கு நேரடியாக தெரியும் என்றும், அதற்கு ஆதரவாக வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளும் நானும் ஒரே சமுதாயத்தை சேர்ந்தவர் என்பதால் அவர்கள் கேட்டுக் கொண்டதன்பேரில் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் சரிதான். எதிரி சூர்யா அடித்தது நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான், கேள்விப்பட்டேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி, மாதம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.